**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 861/2019 |
| நாள் | 04.06.2025 |
| வா.சா.2 | சுப்பிரமணி |
| வயது | 78 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழககறிஞரின் குறுக்கு விசாரணை**

வா.சா.1 கார்த்திகேயன் என்பவரை கடந்த 40 ஆண்டுகளாக தெரியும். பிரதிவாதிகளை கடந்த 15 ஆண்டுகளாக எனக்கு தெரியும். சேகர் என்பவர் என்னுடைய சகோதரியின் மகன் ஆவார். நானும், சேகர் என்பவரும் ஒரே முகவரியில் தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது சகோதரியின் மகன் சேகர் என்பவருக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 6 வது பிரதிவாதி சத்யபிரியா என்பவர் என் அக்காவின் பேத்தி ஆவார். 6 வது பிரதிவாதி சத்யபிரியா திருமணம் ஆகும் வரை என்னுடைய வீட்டில் தான் வசித்து வந்தார் என்றால் இல்லை. 6 வது பிரதிவாதி எனக்கு எததிராகவும், சேகர் என்பவருக்கும் எதிராகவும் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. நான் சேகர் என்பவரை பார்த்தால் பேசுவேன். 6 வது பிரதிவாதி சத்யபிரியா என்னிடத்தில் ஏதேனும் கடன் பெற்றாரா என்றால் ஆமாம். அவர் என்னிடத்தில் ரூ.5,00,000 கடன் பெற்றிருந்தார். அந்த கடனை சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக என்னிடம் வாங்கினார். 6 வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் பெயரில் கிரயம் செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. கடந்த 04.06.2019 ந் தேதியன்று 6 வது பிரதிவாதி சத்யப்பிரியா எனக்கு

கோயம்புத்துரில் உள்ள சொத்தை பொறுத்து ஒரு கிரய ஆவணம் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். வா.சா.1 அந்த கிரய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். பி.த.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் 6 வது பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடன் தொகைக்காகதான் சொத்தை கிரயம் செய்து கொடுத்ததாக கிரய ஆவணத்தில் சரத்துக்கள் எதுவும் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சேகர் என்பவர் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த காசோலை வழக்கில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால் நியாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சேகர் என்பவர் தாக்கல் செய்த காசோலை வழககில் நான் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துவிட்டு, தற்போது இவ்வழக்கிற்காக வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காசோலை வழககில் நான் அளித்த சாட்சியத்திற்கும் முரண்பாடாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை செய்யப்பட்டுள்ள முத்திரையில் உள்ள கையொப்பமும் அதற்கு கீழே உள்ள கையொப்பம் யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.தசா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை நான் தான் எழுதினேனா என்பது பற்றி எனக்கு தற்போது நியாபகமில்லை. நான் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு வா.சா.1 கார்த்திகேயன் என்பவர் வீட்டிற்கு சென்றேனா என்றால் ஆமாம். வா.சா.1 என்னை அழைத்தார். அதனால் நான் காலை 7.30 மணிக்கு சென்றேன். வா.சா.1 வீட்டிற்கு சென்ற போது, வாதியும் மற்றவர்களும் பேசிக்கொண்டு இருந்தார்கள். நான் வீட்டில் அமர்ந்திருந்தேன். வெங்கடேசன் என்பவர் ஸ்டாம்ப் பேப்பரும், முத்திரையும் கொண்டு வந்தார். கடனுறுதிச்சீட்டில் உள்ள சங்கதிகளை யார் குறிப்பிட்டார்கள் என்றால் தற்போது நியாபகமில்லை. சாட்சி மீண்டும் வெங்கடேசன் என்பவர் தான் கடனுறுதிச்சீட்டில் உள்ள சங்கதிகளை கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். நான் வெங்கடேசன் என்பவர்

சொல்ல சொல்ல கடனுறுதிச்சீட்டை எழுதினேன். கடனுறுதிச்சீட்டில் எழுதியதும், சாட்சியுமான நான் தான் கையொப்பம் செய்தேன். வேறு யாரேனும் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்பதை பற்றி நியாபகமில்லை. நான் கடனுறுதிச்சீட்டை எழுதிய போது கடனுறுதச்சீட்டில் கையொப்பம் யாரேனும் செய்திருந்தார்களா என்றால் வெங்கடேசன் என்பவர் கையொப்பம் செய்தது பின்னிட்டுதான் நான் கடனுறுதிச்சீட்டை எழுதினேன். பிரதிவாதிகள் வாதியிடமிருந்து எவ்வளவு தொகை கடன் பெற்றார்கள் என்ற விவரமும், அதற்கு வட்டி எவ்வளவு என்பதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும், சேகர் என்பவரும் வா.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கடன் பெறவில்லை என்றும், அதை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் மீது கொண்ட முன்விரோதத்தின் காரணமாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.